**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 19-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **வேலுநாச்சியார்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**19.06.2025 OS.No. 34/2020 வா.சா.1 வேலுநாச்சியார் ஆஜர்**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய தா.வா. பிராதிற்கும் நிருபண வாக்குமூலத்திற்கும் விரபங்கள் யார் சொன்னார் என்றால் நான் தான் சொன்னேன். பிராது சொத்து விபத்தில் குறிப்பிட்டுள்ள புல எண் என்ன என்றால் பழைய நத்தம் புல எண்.44/8 புதிய புல எண். 275/29 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் மேற்சொன்ன சர்வே எண் விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிருபண வாக்குமூலத்தில் முத்துநாச்சியார் பெயிரல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் உள்ள கையெழுத்துகள் வேலுநாச்சியார் என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துநாச்சியார் எனது சகோதரி தான் அவர் நீநிமன்றம் வர முடியாத சூழ்நிலை உள்ளதால் நான் கையொப்பம் செய்து நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதில் குறிப்பிட்டுள்ள புல எண்கள் எனக்கு பாத்தியமுடையது என்பதை காட்டக்கூடிய குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்கள் குறிப்பிட்ட எனது பெயரில் உள்ள ஆவணங்கள் என்ன என்றால் எனது தகப்பனார் பெயரில் எங்கள் அய்யா ஏற்படுத்திகொடுத்த பாகவஸ்தியும், எனது அய்யா, அபத்தா மற்றும் எனது தகப்பனார் மூவரும் சேர்ந்த எங்கள் தாயாரை Guardian ஆக காட்டி எனது பெயருக்கும் எனது சகோதரி முத்துநாச்சியார் பெயருக்கும் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி 2 ஆவணங்கள் தான் எங்கள் தரப்பில் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களின் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்துள்ள நிலையில் அதன் அசல் ஆவணம் எங்கே உள்ளது என்றால் எனது முன்னோர்கள் மேற்படி அசல் ஆவணங்களை

எங்கே வைத்திருந்தார்கள் என்று எங்களுக்கு தெரியாது என்பதால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளோம். மேற்படி அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கான காரணத்தை எங்களது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் நான் மேற்சொன்ன புல எண்கள் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணங்களில் மேற்படி சர்வே எண்களை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. சாட்சி தானாக மீண்டும் நான் படிக்காதவர் என்பதால் என்னால் சொல்லமுடியவில்லை. நான் மேற்படி சர்வே எண்கள் வா.சா.ஆ 2 மற்றும் 3 ஆவணங்களில் உள்ளதாக எவ்வாறு சொன்னேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர் சொன்னதை வைத்து சொன்னேன். கிராம நிர்வாக அலுவலர் மேற்படி 2 ஆவணங்களையும் படித்து பார்க்கவில்லை என்றால் நான் அவரிடம் சமர்பிக்கவில்லை. நான் பிராதின் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மாலில் மேற்கே அங்குச்சாமி பிள்ளத்தியான் வீடுகள் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிள்ளத்தியான் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் மானாமதுரையிடத்தில் கடன் வாங்கி தான் வீடு கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிள்ளத்தியான் கூட்டுறவு சங்கத்திற்கு பதிவு செய்து கொடுத்த அடமான பத்திரத்தின் சொத்து விபரத்தில் கிழக்கே செருவம்மாளுக்கு பாத்தியப்பட்ட காலி இடமும் நடைபாதையும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து தா.வா புலத்தில் இல்லை என்பதால் தான் மேற்படி பிள்ளத்தியான் கூட்டுறவு சங்கத்திற்கு பதிவு செய்து கொடுத்த அடமான பத்திரத்தில் எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த இடத்தில் தா.வா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்கத் தெரியாததால் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எத்தனை சொத்துக்கள் குறிபிடப்பட்டுள்ளது என்னென்ன சொத்துக்களுக்கு சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பட்டா எண்.271ல் அடங்கிய நஞ்சையும் வேறு சில இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் மனை இடம் பட்டா எண் சொல்லி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பட்டா எண் என்ன என்றால் 275/29 ஆகும். நான் சொல்வது போல் மேற்படி பட்டா எண் 275/29 என்பது மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரத்திலும் பட்டா எண், சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட காலத்தில் எங்கள் ஊருக்கே ஒரே பட்டா எண் தான் இருந்தது. அந்த பட்டா எண். 44/8 ஆகும். மேற்படி பட்டா எண். 44/8 ம் வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் படிக்கவில்லை என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.3 ஆணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கு நான்கு மால் விபரம் தெரியமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் பொன்னையா என்கிற வேலுசேர்வை வீட்டிற்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பொன்னையா என்கிற வேலுசேர்வை என்பவரிடம் தான் இந்த பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர் செருவம்மாள் தா.வா சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் நான்கு மாலில் பொன்னையா என்கிற வேலுசேர்வை வீடு தான் தாவா சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 2 மற்றும்3 ஆவணத்தில் கண்ட சொத்து புல எண். 269/37 என்றால் சரியல்ல. அது எங்கள் சொத்து அல்ல. புல எண் 269/37 க்கு பட்டா எண். 345 ஆக பொன்னுச்சாமி, மணி, குருசாமி ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி குருசாமி என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். மணி எனது பெரியப்பா ஆவார். பொன்னுச்சாமி என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் ஆவார். மேற்படி வா.சா.ஆ.2 மற்றும்3 ஆவணங்களில் கண்ட சொத்துக்கு Survey Field மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி Survey Field ல் என்னுடைய பெயரோ என்னுடைய மூதாதையர் பெயரோ தாவா புல எண்ணுக்கு குறிப்பிடப்படவில்லை என்றால் நாங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கே செல்லவில்லை என்று சாட்சி தற்போது சொல்கிறார்.

**(1,2 எதிர்வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam